இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 133 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 08 – செவ்வாய்க்கிழமை 23 டிசம்பர் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 133 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 08 - Tuesday 23 December 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## மகாத்மா காந்தியின் பெயரையே நீக்கியதோடு மட்டுமின்றி

# 100 நாள் வேலை திட்டத்தையே ஒன்றிய பா.ஜ.க. அரசு சிதைத்துவிட்டது!

## நெல்லை அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!

**நெல்லை, டிச. 23 -**

**“மகாத்மா காந்தியின் பெயரையே நீக்கியதோடு மட்டுமின்றி 100 நாள் வேலை திட்டத்தையே ஒன்றிய பா.ஜ.க. அரசு சிதைத்துவிட்டது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நெல்லையில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.12.2025) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:-

திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

“பாளையங்கோட்டைச் சிறையினிலே பாம்புகள் பல்லிகள் நடுவினிலே, அஞ்சாமல் இருந்தவர் யாரு? அந்த கலைஞரின் புகழினைப் பாடு!” என்று 1965ஆம் ஆண்டு நடந்த மொழிப்போரில் ஈடுபட்ட தலைவர் கலைஞரின் தீரத்தைச் சொல்ல காரணமான, பாளையங்கோட்டையில் இருக்கும் நெல்லைச் சீமைக்கு நான் வந்திருக்கிறேன்!

அன்றைக்கு, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டையில் அடைக்கப்பட்டவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். நாடே போற்றும் ஆட்சியை புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்து அவர் வழங்கினார்! அதுதான், திராவிட மாடலின் நவீன தமிழ்நாட்டின் தொடக்கமாக அமைந்தது!

### தியாகிகளைத் தந்த மண்!

இந்திய விடுதலைப் போராட்டத்திலும், தமிழ்நாட்டின் வரலாற்றிலும் பொன்னால் பொறிக்கத்தக்க தியாகங்களை – தியாகிகளைத் தந்த மண், இந்த திருநெல்வேலி மண்! அப்படிப்பட்ட இந்த நெல்லை மக்களுக்கு, ஒரு மகிழ்ச்சியான செய்தியை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.12.2025) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 235 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலான 33 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 356 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 11 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, திருமதி பி.கீதாஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா. சுப்பிரமணியன், மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, மருத்துவர் ராணி ஸ்ரீ குமார், ராபர்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், ரூபி மனோகான், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் இரா.சுகுமார். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த நெல்லையின் அடையாளமாக விளங்குகிறது நெல்லையப்பர் கோயில். ஏழாம் நூற்றாண்டில், நின்றுசீர் நெடுமாறப் பாண்டியரால் கட்டப்பட்ட இந்த கோயிலை 700 ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பித்து திருப்பணிகளை செய்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். நெல்லையப்பர் கோயிலின் வெள்ளித் தேர் 1991ல் தீ விபத்தில் எரிந்து போனது. கடந்த பிப்ரவரி மாதம், நான் இதே நெல்லைக்கு வந்தபோது மீண்டும் அந்த வெள்ளித் தேர் ஓடும் என்று அறிவித்தேன். மகிழ்ச்சியோடு சொல்கிறேன், இப்போது அதற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டது. இன்னும் சில நாட்களில், அதாவது ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து அந்த வெள்ளித் தேர் ஓடும் என்று மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### “பொருநை – தமிழரின் பெருமை!”

இப்போது நான் மகிழ்ச்சியில் மட்டுமல்ல, பெருமையாகவும் நிற்கிறேன். அதற்கு காரணம் என்னவென்றால், நேற்று, பொருநை அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்து பெருமிதத்தில் கம்பீரமாக உங்கள் முன்பு நான் நின்று கொண்டிருக்கிறேன்! “பொருநை தமிழரின் பெருமை!” “இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனிமேல், தமிழ் நிலத்தில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும்! என்ற நம்முடைய வாதத்திற்கான சான்றுகளை அறிவியல் பூர்வமாக நாம் நிறுவி இருக்கிறோம்!

நாம் ஏன் கீழடி – பொருநை என்று நம்முடைய வரலாற்று தரவுகளை, தொடர்ந்து உரக்கப் பேசிக் கொண்டிருக்கிறோம்? தமிழர்களான நம்முடைய பண்பாடு தனித்துவமானது, முற்போக்கானது! இந்தியத் துணைக்கண்டத்தின் நாகரிகத்தின் தொட்டிலாகவும், உச்சமாகவும் இருந்தது, நம்முடைய தமிழ்நிலம்தான்! அதற்கு பல இலக்கியச் சான்றுகள் இருக்கிறது! ஆனால், இலக்கியம் மட்டுமே ஒரு போதும் வரலாற்று சான்றாகாது! எனவே, அதை அறிவியல் ரீதியாக மெய்ப்பிக்கவும், தொல்லியல் சான்றுகளை சேகரிக்கவும் நாம் மேற்கொள்ளும் காலப் பயணம் தான் அகழாய்வுகள்!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### அனுபவமிக்க சிறந்த செயல்வீரர் அமைச்சர் கே.என்.நேரு!



**முப்பெரும் விழாவாக, இந்த அரசு விழாவை மிகச் சிறப்பான வகையில் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் நம்முடைய சீனியர் அமைச்சர்களில் ஒருவராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய கே.என்.நேரு அவர்களையும் நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!. அனுபவமிக்க சிறந்த செயல்வீரர் உங்கள் மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக கிடைத்திருக்கிறார்! அவர் கையில் பெரிய துறை இருக்கிறது! அதனால், பெரும்பாலான திட்டங்களை, அவரே உங்களுக்கு கொண்டு வந்துவிடுவார். சீனியர் அமைச்சர் என்கின்ற காரணத்தால், மற்ற அமைச்சர்களிடம் கனிவாக பேசி, தேவையான திட்டங்களை கொண்டு வந்துவிடுவார். இங்கே நாம் நடைமுறைப்படுத்தி வருகின்ற திட்டங்களைப் பார்த்தாலே நேருவின் Effect நன்றாக தெரியும்!**

## “மகாத்மா காந்தி பெயர் நீக்கம்!

### சோனியா காந்தி கண்டனம்!



*புதுடெல்லி, டிச. 23 -*

“மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை மோடி அரசு சீர்குலைத்துவிட்டது” என காங். மூத்த தலைவர் சோனியா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோ செய்தியில் கூறியிருப்பதாவது: -

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை பலவீனப்படுத்தியதன் மூலம் கோடிக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள், நிலமற்ற விவசாயிகள் மீது மோடி அரசு தாக்குதல் நடத்தியுள்ளது. கடந்த 11 ஆண்டுகளாக, கிராமப்புற ஏழைகளின் நலனை மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை.

20 ஆண்டுகளுக்கு முன்பு ஏழைகளின் வாழ்வாதாரத்துக்காக கொண்டுவரப்பட்ட புரட்சிகரமான நடவடிக்கை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம். இதன் மூலம் தொழிலாளர்கள் இடம் பெயர்வது முடிவுக்கு வந்தது. வேலைவாய்ப்புக்கு சட்ட உரிமை வழங்கப்பட்டது.

கிராம சுயராஜ்ஜியம் என்ற காந்தியின் தொலைநோக்கை நனவாக்க, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இத்திட்டத்தில் புல்டோசரை ஏற்றி மோடி அரசு நாசமாக்கிவிட்டது.

இத்திட்டத்தில் மகாத்மா காந்தியின் பெயர் மட்டும் நீக்கப்படவில்லை. இத்திட்டத்தின் முழு வடிவமும், எந்த ஆலோசனையும் இன்றி மாற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு சோனியா காந்தி கூறியுள்ளார்.

## டெல்லியில் கடும் பனிமூட்டம்: விமான சேவை பாதிப்பு!

*புதுடெல்லி, டிச. 23 -*

டெல்லியில் கடும் பனிமூட்டம் காரணமாக விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து இரண்டும் பாதிக்கப்பட்டன. நேற்று முன்தினம் காலை (ஞாயிறு) நிலவரப்படி டெல்லி விமான நிலையத்தில் 200க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாகியுள்ளன.

கடந்த சில நாட்களாக வட இந்தியாவில் கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது. இன்றும் கடும் பனி மூட்டம் நிலவியதால், எதிரில் வரக்கூடிய விமானங்கள் தெரியாத நிலை உருவாகி பல பகுதிகளில் சாலைப் போக்குவரத்து பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. மோசமான வானிலை மற்றும் பனிமூட்டம் காரணமாக டெல்லி விமான நிலையத்தில் 200க்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் வடக்கு ரயில்வேயால் இயக்கப்படும் 50க்கும் மேற்பட்ட ரயில்களும் தாமதமாகியுள்ளன.

இதுகுறித்து இந்திய விமான நிலையங்கள் ஆணையம் வெளியிட்ட அறிவிப்பில், “வட இந்தியாவின் சில பகுதிகளில் நிலவும் பனிமூட்டம் காட்சி தெளிவின்மையை உருவாக்குகிறது. இது பல விமான நிலையங்களில் விமானச் செயல்பாடுகளில் தாமதங்கள் அல்லது மாற்றங்களுக்கு வழி வகுக்கும். எனவே, பயணிகள் தங்கள் விமான நிறுவனங்களிடமிருந்து அதிகாரப்பூர்வ வழிகள் மூலம் விமானப் பயணத் தகவல்களைச் சரிபார்க்கவும், விமான நிலையப் பயணம் மற்றும் நடைமுறைகளுக்குக் கூடுதல் நேரத்தை ஒதுக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 100 நாள் வேலைத் திட்டத்தில்

## மகாத்மா காந்தியின் பெயர் நீக்கம்!

### முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் கடும் கண்டனம்!

*சென்னை, டிச. 23 -*

100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தின் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை ஒன்றிய அரசு நீக்கியது அவரை இரண்டாவது முறையாக கொலை செய்துள்ளதற்கு சமம் என காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் 78வது பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய முன்னாள் நிதி



அமைச்சர் ப.சிதம்பரம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது பேசிய அவர், சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்திக்கு எதிரான நேஷனல் ஹெரால்டு வழக்கில் அமலாக்கத்துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை டெல்லி நீதிமன்றம் ரத்து செய்துள்ளதாகவும், இதன் மூலம் ஒன்றிய அரசின் பழிவாங்கும் நடவடிக்கை அம்பலமாகி விட்டதாகவும் கூறினார்.

மேலும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திலிருந்து மகாத்மா காந்தியின் பெயரை ஒனறிய அரசு நீக்கியது, அவரை இரண்டாவது முறையாக கொலை செய்துள்ளதற்கு சமம் என்றும் ப.சிதம்பரம் விமர்சித்தார்.

இத்திட்டம் ரத்து செய்யப்படும் வரை காங்கிரஸ் போராட்டம் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

### காரைக்குடி அருகில் உள்ள

## செட்டிநாடு விமானப் போக்குவரத்து மையமாக மாறுகிறது!

### தமிழ்நாடு அரசு டெண்டர் வெளியீடு!

*சென்னை, டிச. 23 -*

காரைக்குடியிலுள்ள செட்டிநாடு விமான நிலையத்தை விமானப் போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கான ரூ.3 கோடியே 97 லட்சம் செலவில் கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு டெண்டர் கோரி உள்ளது.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியிலுள்ள செட்டிநாடு விமான நிலையம் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

இந்த விமான நிலையத்தை விமானப் போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கான ஆரம்பகட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக காரைக்குடி செட்டிநாடு விமான நிலையத்தை விமானப் போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கான ரூ.3 கோடியே 97 லட்சம் செலவில் கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு டெண்டர் வெளியிட்டுள்ளது.

பறக்கும் பயிற்சி நிறுவனங்களுக்கும், ட்ரோன் சோதனைக்கும் இந்த விமான ஓடுபாதையை வழங்குவது குறித்து தமிழக அரசு பரிசீலித்து வருகிறது.

### ஒரே ஆண்டில் இரண்டாவது முறையாக

## ரயில்வே கட்டணம் உயருகிறது!

### டிச. 26 — முதல் அமல்!

*புதுடெல்லி, டிச. 23 -*

ஒரே ஆண்டில் இரண்டாவது முறையாக ரயில்வே கட்டணம் உயர்த்தப்படுகிறது. புதிய கட்டண உயர்வு டிசம்பர் 26ஆம் தேதி முதல் அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை ஒன்றாம் தேதி ரயில் கட்டணங்களை ஒன்றிய அரசு உயர்த்தியது. பயணிகளின் சேவைகளுக்கான நிதியை அதிகரிக்கும் வகையில், கட்டணம் உயர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நடப்பாண்டில் 2வது முறையாக ரயில் கட்டணத்தை ஒன்றிய அரசு உயர்த்தி உள்ளது.

இதன்படி, 215 கிலோ மீட்டர் வரை கட்டண உயர்வு இல்லை. சாதாரண வகுப்புகளில் 215 கிலோ மீட்டருக்கும் அதிகமான பயணத்துக்கு கிலோமீட்டருக்கு 1 பைசா அதிகரிக்கப்படுகிறது.

மெயில், எக்ஸ்பிரஸ் ஏசி அல்லாத மற்றும் ஏ.சி. வகுப்புகளுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 2 பைசா உயர்த்தப்படுகிறது.

500 கிலோ மீட்டர் வரையான குளிர்சாதன வசதி இல்லாத ரயில் பெட்டிகளில் கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படும்.

இந்த கட்டண உயர்வு டிசம்பர் 26ஆம் தேதி முதல் அமலுக்கு வருவதாக ரயில்வே அறிவித்துள்ளது.

புறநகர் ரயில்களின் கட்டணத்தில் மாற்றமில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.